**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP. 290/2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.த.பாரதி, பலகை எழுத்தர் நிலை –2 அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரீட்டா | க/பெ.: | தம்பிதுரை |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம். |
| வயது: | 48 | முகவரி: | திருத்துறைப்பூண்டி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.03.2026

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 07.06.2023–ல் மோட்டார் வாகன ஆய்வாளர் மனுதாரர் சூரியமூர்த்திக்கு சொந்தமான TN 50 AX 7354 என்ற இருசக்கர வாகனமான ஸ்கூட்டியை ஆய்வு செய்தார். மனுதாரர் ஓட்டுநர் உரிமம் கொடுக்கவில்லை. காப்பீடு ஆவணங்களை கொடுக்கவில்லை. மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு மனுதாரர் அபதாரம் ரூ.7500 செலுத்தியுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும். மனுதாரர் செலுத்திய அபதார

தொகைக்கான ரசீது உண்மை நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை;-</u>**

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.